## 25. உங்க கிருபை இல்லாம

### பல்லவி

உங்க கிருபை இல்லாம - நான்
பரிசுத்தமாய் வாழ முடியாதே
உங்க இரக்கம் இல்லாம - உங்க
சமூகத்திலே நிக்க முடியாது

### அனுபல்லவி

*நான் நிற்பதும் நிலைப்பதும் உங்க கிருப*
*நான் ஜீவனோடு இருப்பது உங்க கிருப*

### சரணங்கள்

1. என் மாம்சத்தை கீழ்ப்படுத்தும் கிருப
அதை அடைக்கி ஆளசெய்யும் உங்க கிருப
- நான் நிற்பதும்

2. தீமையை சகிக்க வைக்கும் கிருப
அதை நன்மையாக மாற்றுகின்ற கிருப
- நான் நிற்பதும்

3. சத்துருவுக்கு உதவி செய்யும் கிருப
பகைப்போருக்காய் ஜெபிக்கும் கிருப
- நான் நிற்பதும்

4. தூற்றுவோரை நேசிக்க வைக்கும் கிருப
தாக்குவோரை மன்னிக்கும் கிருப
- நான் நிற்பதும்